தலைமையில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஆணையிட்டதன் காரணமாக, தற்போது திருக்கோயில்களுக்கு ஆண்டிற்கு 6 கோடி ரூபாய் அளவிற்கு வருமானம் வருவதோடு, இந்தத் திட்டம் முழுமைபெறும்போது, ஆண்டிற்கு 25 கோடி ரூபாய் அளவிற்கு வருமானம் வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

10—

வனவிலங்குகள் வருவதைத் தடுத்தல்

***14476—திரு. P.R.G. அருண்குமார்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கவுண்டம்பாளையம் தொகுதி, ஆணைகட்டி மற்றும் பெரியநாயக்கன்பாளையம் ஆகிய பகுதிகளில் வனவிலங்குகள் வருவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆணைகட்டி, பெரியநாயக்கன்பாளையம் பகுதிகளில் வனவிலங்குகள் வருகையைத் தடுக்க, அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மனித-விலங்கு மோதல்களைத் தடுக்க 3 சிறப்பு இரவு ரோந்து குழுக்கள் அமைத்தும், யானைபுகா அகழிகள் அமைத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார் அவர்கள்.*

2024 பிப்ரவரி 13]

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் அவர்களை வணங்குகிறேன். கவுண்டம்பாளையம் தொகுதிக்குட்பட்ட பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியம், நாயக்கன்பாளையம், 24-வீரபாண்டி, சின்னத்தடாகம், நஞ்சுண்டாபுரம், சோமையம்பாளையம், பன்னீர்மடை ஊராட்சிகளிலும், அருகிலுள்ள கூடலூர் நகராட்சி, காரமடை ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளிலும் யானை மற்றும் காட்டுப் பன்றிகளால் மனிதர்களுக்கும், விவசாயப் பயிர்களுக்கும் சேதம் ஏற்படுத்தப்படுவதால், விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே, இச்சிரமத்தைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக, காட்டுப் பன்றிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த, பஞ்சாயத்து நிர்வாகமே சுட்டுக் கொல்லலாம் என கேரள அரசு அனுமதி வழங்கியுள்ளது. எனவே, கேரள அரசைப் போன்றே, தமிழ்நாடு அரசும் காட்டுப் பன்றிகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை வனக் கோட்டத்தின் முக்கியப் பிரச்சினையாகவும், தினசரி நிகழ்வாகவும் மனித–விலங்கு மோதல்கள் அதிகளவில் ஏற்படுகின்றன. இந்நிகழ்வுகள் ஏற்படாமல் தவிர்க்கும் வகையில், வேட்டைத் தடுப்புக் காவலர் மற்றும் யானை விரட்டும் காவலர் ஆகியோர் அடங்கிய 3 சிறப்பு இரவு ரோந்துக் குழுக்கள், Alpha, Beta, Gamma என்ற பெயரில் அமைக்கப்பட்டு, தீவிர கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்படி குழுக்களில் உள்ள 16 பணியாளர்கள் தினசரி மாலை 6 மணி முதல் மறுநாள் காலை 8 மணி வரை தொடர் வனவிலங்குகள் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

மேலும், தற்போது கூடுதலாக பெரியநாயக்கன்பாளையம் வனச் சரகத்திற்கு 6 பணியாளர்கள் மற்றும் காரமடை வனச் சரகத்திற்கு 6 பணியாளர்கள் வீதம் வனவிலங்குகள் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதைத் தவிர, காவல் துறை, மின்வாரியப் பணியாளர்களுடன் வனத்

துறைப் பணியாளர்கள் இணைந்து Anti-depredation Committee ஒன்று அமைக்கப்பட்டு, மனித-விலங்கு மோதல்களைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், பெரியநாயக்கன்பாளையம் வனச் சரகத்தில், வன விலங்குகளின் நடமாட்டம், வன விலங்குகளின் குணாதிசயம், பயிரிடும் முறையில் செய்ய வேண்டிய மாற்றம் மற்றும் தோட்டங்களின் மாற்றம் குறித்து தொடர்ச்சியாக பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், ஒரு புதிய முயற்சியாக 'Thadam' என்னும் WhatsApp குழு அமைக்கப்பட்டு, அதில் யானைகள் நடமாட்டம் குறித்து தகவல் பகிரவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதைத் தவிர, கூடுதலாக இந்த நிதியாண்டில் 3 கி.மீ. தூரத்திற்கு யானைபுகா அகழிகள் பராமரிக்கப்பட்டு, சூரிய மின்சக்தியில் இயங்கும் குடிநீர்த் தொட்டியும் அமைக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11–55

யானைகளின் உணவுத் தேவையை வனத்திலேயே பூர்த்தி செய்யும்பொருட்டு NABARD திட்டத்தின்கீழ் சுமார் ரூபாய் 25 இலட்சம் செலவில் 20,000 நாற்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன. இதைத் தவிர, 2022–2023 மற்றும் 2023–2024 ஆம் ஆண்டுகளில் மனித-விலங்கு மோதலைத் தடுக்க 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ.41 இலட்சம் மதிப்பீட்டில் யானை புகா அகழிகள் மற்றும் 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சூரிய மின்சக்தி வன உயிரின குடிநீர்த் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியே அவ்வளவுதான். மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி கேரள மாநிலத்தைப்போன்று காட்டுப் பன்றிகளைச் சுடலாமா என்பதுதான். மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார், நீங்கள் அடுத்த கேள்வியைக் கேளுங்கள்.

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அடுத்த கேள்வியைக் கேட்கிறேன். அதற்கும் சேர்த்து மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களை பதில் சொல்லச் சொல்லுங்கள்.

2024 பிப்ரவரி 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி.*

திரு. P.R.G. அருண்குமார்: *அதேபோன்று, தமிழக அரசு கொண்டு வந்துள்ள தமிழ்நாடு மின்வேலிகள் (பதிவு மற்றும் ஒழுங்குமுறை) விதிகள், 2023-ல் சூரிய மின் சேவையை மட்டுமே பயன்படுத்த வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்துள்ளது. மழைக்காலங்களில் சூரிய மின்வேலி இயங்குவதில்லை. ஆகவே, ஏற்கெனவே நடைமுறையில் இருந்தபடி 12* volt *மின்சாரத்தைப் பயன்படுத்த அனுமதி வழங்க வேண்டும். அதேபோல, வன விலங்குகளால் விவசாயப் பயிருக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு காப்பீட்டுத் திட்டம்மூலம் முழுமையான நிவாரணம் வழங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் யானைகளைப்பற்றி கேட்டார். இந்த அரசால் எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை விரிவாகச் சொன்னால்தான் புரியும். இதைத்தவிர, சில உயிரிழப்புகள் ஏற்பட்டால் நிவாரணமாக கடந்த ஆட்சியில் 4 இலட்சம் ரூபாய் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் அந்தத் தொகையை 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தினார்கள். அந்தத் தொகை கடந்த மாதம் ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில், கூடிய விரைவில் அதற்கான அரசாணை வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

காட்டுப் பன்றிகளைப் பொறுத்தவரையில், கேரள மாநிலத்தில் order *வழங்கியதைப்போன்று, தமிழகத்தில்* order *வழங்க வேண்டுமென்றுதான் நிறைய பேர் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.* Wildlife Protection Act, *1972 வன விலங்கு பாதுகாப்புச் சட்டம் 1972-ன்படி, வன விலங்குகளை 6 விதமாக அட்டவணைப்படுத்தி உள்ளார்கள். அதாவது,* Schedule I to Schedule VI *என வகைப்படுத்தி வைத்திருக்கிறார்கள். ஆனால், அந்த* Schedule*-ல் கடந்த ஏப்ரல் மாதம் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தப் பழைய அட்டவணையில்தான்* Vermin *என்கிற ஒரு* section *இருந்தது. அந்த* Vermin *என்பது*

bats, crows அதாவது காகம், வவ்வால் உள்ளிட்டவை. இது அல்லாமல் எலிக்கென ஓர் அட்டவணை இருந்தது. ஆனால், ஏப்ரல் மாதம் Schedule-ஐ மாற்றியிருக்கிறார்கள். எதனை மாற்றியிருக்கிறார்களென்றால், அந்த Schedule I to Schedule IV-ஐ மட்டும் வைத்துக்கொண்டு, Schedules V and VI-ஐ எடுத்துவிட்டார்கள். அதிலே vermin என்ற category-ஐ எடுத்துவிட்டார்கள். இதுமட்டுமல்லாமல், கேரளாவைப் பொறுத்தவரையில், sub-rule 11(1)(b)-ன்படி இதுபோன்று ஏதாவது பாதிப்பு வந்ததென்றால், பஞ்சாயத்து மூலமாக சுடலாம் என்பதை ஒரு rule ஆக பல நிபந்தனைகளுடன் கொண்டு வந்திருக்கிறார்கள். இதுகுறித்து ஆய்வு செய்ய நம்முடைய அரசும் விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்ட Conflict Resolution Committee-ஐ அமைத்துள்ளது. அக்குழுவில் கேரளாவில் பின்பற்றப்படும் முறைகள் குறித்து ஆய்வுகள் செய்து கொண்டிருக்கிறார்கள். அதுகுறித்த அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படும். அதைப்பொறுத்து பல நடவடிக்கைகள் எடுக்கவிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் மம்தா என்ற ஒரு பெண்மணி கடந்த 21-1-2024 அன்று யானையால் தாக்கப்பட்டு, அந்த இடத்திலேயே இறந்தார். அதேபோல, கடந்த 29-1-2024 அன்று சாம்பசிவம் என்ற ஒரு பெரியவரும் யானையால் தாக்கப்பட்டு இறந்திருக்கிறார். அதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக முனிரத்தினம் என்ற ஒரு நபர் யானையால் தாக்கப்பட்டு கால் முறிவு ஏற்பட்டு மருத்துவமனையில் இருக்கிறார். இப்படி தொடர்ந்து இரண்டு மாதத்திற்குள்ளாக அந்தப் பகுதியில் இருவர் இறந்துவிட்டார்கள், ஒருவர் படுகாயங்களுடன் இப்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறார். ஒரேயொரு ஒற்றை யானை அந்தப் பகுதியில் சுற்றிக் கொண்டிருக்கிறது. அந்த ஒற்றை யானையால் இரண்டு மாதங்களுக்குள்ளாக இரண்டு பேர் உயிரிழந்தும், ஒருவர் படுகாயமுமடைந்திருக்கிறார்கள். அந்தப் பகுதியில்

2024 பிப்ரவரி 13]

மாலை நேரங்களில் மக்கள் செல்வதற்கே அச்சம் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த ஒற்றை யானையைப் பிடிப்பதற்காக கும்கி யானையைக் கொண்டுவந்து, அந்த யானையைக் காட்டுப் பகுதிக்குள் அழைத்துச் செல்வதற்குரிய நடவடிக்கையை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டபடி, கண்டிப்பாக அதிகாரிகளோடு கலந்தாலோசித்து, அந்த இடத்தில் கூடியவிரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

நண்பகல் 12–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

4. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) அனைவரும் உட்காருங்கள். நான் சொல்கிறேன். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)–ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் ஆறாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்:*